1980 ஜூலை 26]

ஆற்காடு தொகுதியில் மின் இணைப்புத் திட்டம்.

* **வினா எண் 48—திரு. ஏ. எம். சேதுராமன்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதியில், அரிசன மற்றும் ஏழைகள் குடிசைகளுக்கு மின்விளக்கு இணைப்பு கொடுப்பதை விரிவுபடுத்தி, விரைவுபடுத்தும் திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) ஏழை விவசாயிகட்கு, பம்புசெட்டுக்கான இணைப்பு கொடுப்பதில் நெடுநாட்களாக காலதாமதம் ஏற்படுவதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம். தமிழகம் முழுதும் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

(ஆ) மனுச்செய்த தேதியின் அடிப்படையில் மட்டும் முன்னுரிமை அளித்து பம்புசெட்டுக்கு மின்சாரம் வழங்குவதில் துரிதப்படுத்துவதன் நோக்கத்தில் புதிய முறை 1—7—1978 முதல் அமுலாக்கப்பட்டுள்ளது.

பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கல்.

* **வினா எண் 49—திரு. இல. பலராமன்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979-80-ல் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கோரி வந்த மனுக்கள் எவ்வளவு ?

(ஆ) அவற்றுள் இதுவரை எத்தனைக்கு வழங்கப்பட்டது ?

(இ) நிலுவையில் உள்ள மனுக்கள் எவ்வளவு ? மாவட்டவாரியாக ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) 79,110 மனுக்கள்.

(ஆ) & (இ) 1979-80 ஆம் ஆண்டில் மொத்தமாக மின்வாரியம் 46,670 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கியது. ஆனால், இதில் 1979-80 ஆம் ஆண்டில் வந்த விண்ணப்பங்களில் எவ்வளவு விண்ணப்பங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது என்ற விவரம் இல்லை. 1—4—1980-ல் நிலுவையிலுள்ள மொத்த மனுக்கள் 2,36,240.

திரு. ப. நெடுமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விவசாயிகள் பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்பு கொடுப்பது நீண்டகாலமாக் கைசலாகாமல் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்தில்